வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
Field Work Centre
FWC
தவணைப் பரீட்சை, நவம்பர்- 2016
Term Examination, November - 2016

| தரம் :- 13 (2017) | கிறிஸ்தவம் – I | இரண்டு மணித்தியாலங்கள் |
|---|---|---|

❖ மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

01. திருவிவிலியத்தின் பிரதான கருப்பொருள்
1. கிறிஸ்து இயேசு  2. சீனாய் உடன்படிக்கை  3. மோசே
4. மரியாள்  5. திருச்சபை

02. பின்வரும் கூற்றுக்களைக் கருத்திற் கொள்க.
A: தவறான கொள்கைகளை விலக்குதல்
B: உண்மையை மாறாது பாதுகாத்தல்
C: கிறிஸ்தவ திருச்சபை வேகமாகப் பரவிச் செல்லுதல்
D: கிறிஸ்துவின் வார்த்தைக்கும் செயலுக்கும் சாட்சி பகர்ந்த திருத்தூதர்கள் மரணித்தல்

மேலுள்ளவற்றுள் வாய்மொழிப்பாரம்பரியம் எழுத்து வடிவில் பெற வேண்டிய தேவை ஏற்படக் காரணமான கூற்றுக்கள்
1. ABC  2. ABD  3. ACD  4. BCD  5. ABCD

03. பழமைவாய்ந்த நூலாகத் திருவிவிலியம் அறிமுகம் செய்யப்படுவதற்கான காரணம். அதில் உள்ளடக்கப்பட்டுள்ள
1. கீழைத்தேய இலக்கிய அம்சமாகும்
2. கீழைத்தேயங்களுக்குரிய விடயமாகும்
3. பழைய மொழிகளின் கருத்துக்களும் காட்சிகளுமாகும்
4. வரலாற்றுக் கதைகளும் காட்சிகளுமாகும்
5. அரசியல் செய்திகளாகும்

04. பின்வருவனற்றுள் எழுதும் இறை ஏவுதல் என்பதற்கு உதாரணமாகக் கொள்ளக் கூடிய வசனம் எது?
1. உன் வாயில் நான் வைத்துள்ள என் வார்த்தைகளும் ................. நீங்கிவிடாது
2. தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்ட மனிதர்கள் கடவுள் அருளியதை உரைத்ததே இறைவாக்கு
3. நீங்கள் பேசவேண்டியவற்றை தூய ஆவியார் அந்நேரத்தில் உங்களுக்கு கற்றுத் தருவார்
4. அவருக்குத் தம் தூய ஆவியை அருளியவர் எங்கே
5. நான் உனக்குச் சொல்லியிருக்கும் சொற்களை எல்லாம் ஏட்டுச் சுருளில் எழுதிவை

05. விடுதலைப் பயணத்தின் பின் கானான் தேசத்தில் ஆட்சி செய்த தலைவர்கள்
1. நீதிபதிகள்  2. குலமுதுவர்கள்  3. ஆளுனர்கள்
4. தலைமைக்குருக்கள்  5. பரிசேயர்கள்

06. சமாரியப்பகுதியில் குறிப்பிடத்தக்க இடங்களில் ஒன்று
1. நாசரேத்து  2. பெத்தானியா
3. ஒலிவமலை  4. கெரிசிம் மலை
5. கலிலேயாக்கடல்

07. பாரவோனின் முடியின் மீது இருந்தது
1. கழுகின் சின்னம்  2. பாம்பின் சின்னம்
3. பல்லின் சின்னம்  4. பூவின் சின்னம்
5. வெற்றியின் சின்னம்

08. இறைவனுடைய வல்லமையை ஏற்றுக் கொள்ளாத காரணத்தால் வாக்களித்த நாட்டுக்கு இஸ்ரயேல் மக்ககளோடு செல்ல மாட்டீர்கள் என்று கூறப்பட்டது
1. ஆரோனுக்கும் யோசுவாவிற்கும்
2. யோசுவாவிற்கும் மோசேக்கும்
3. இஸ்ரயேலர்களுக்கும், மக்கள் தலைவர்களுக்கும்
4. மோசேக்கும், ஆரோனுக்கும்
5. அமலேக்கியருக்கும், ஆரோனின் வழிமரபினருக்கும்

09. பின்வரும் நூல்களுள் இணைத்திருமுறை நூல்களுள் அடங்காதவை
1. தோபித்து
2. யூடித்து
3. பாருக்
4. யோபு
5. சீராக்கின் ஞானம்

10. பெரித் என்னும் எபிரேயச் சொல்லின் கருத்து
1. மீட்பு 2. நினைவாதல் 3. கசப்பு
4. உடன்படிக்கை 5. சோதித்தல்

11. பத்துக்கட்டளைகளில் செய்ய வேண்டும் எனும் சார்பான சட்டங்கள்
1. மூன்று 2. ஏழு 3. ஐந்து 4. எட்டு 5. இரண்டு

12. முதலாவது படைப்புக் கதையின் படி இரண்டாம் நாளுக்கு சமாந்திரமாக எத்தனையாம் நாள் ஒப்பிட்டுக் காட்டப்படுகிறது.
1. முதலாவது நாள் 2. மூன்றாம் நாள்
3. நான்காம் நாள் 4. ஐந்தாம் நாள்
5. ஆறாம் நாள்

13. இரண்டாவது படைப்புக்கதையின் படி மனிதன் இறைவனோடு படைப்புச் செயற்பாட்டில் தொடர்புபடுவது
1. உயிருள்ள அனைத்திற்கும் பெயரிட்டதன் மூலம்
2. படைப்பை ஆளுவதன் மூலம்
3. படைப்பை விருத்தி செய்வதன் மூலம்
4. பாவத்திலிருந்து விலகியிருப்பதன் மூலம்
5. பலி ஒப்புக் கொடுப்பதன் மூலம்

14. பாவம் பற்றிய பின்வரும் கூற்றுக்களைக் கருத்திற் கொள்க
A: இறைவனுக்கு சொந்தமானதைப் பறித்தெடுத்தலாகும்
B: லௌகீகத்திற்கு அடிமையாதலாகும்
C: இறைதிட்டத்திற்கு விகாரப்படுத்துதலாகும்
D: சீனாய் உடன்படிக்கையை மீறுதலாகும்
இவற்றுள் திருவிவிலிய வல்லுனர்கள் எடுத்துக் காட்டுவதன்படி பாவம் பற்றிய சரியான கூற்றுக்களாவன
1. AB 2. AC 3. AD 4. BC 5. BD

15. மனித பலவீனங்களைப் பயன்படுத்தி இறைவன் தமது திட்டத்தை முன்னெடுத்துச் செல்கிறார் என்பதை எடுத்துக் காட்டுவதற்குப் பொருத்தமான ஓர் உதாரணம்
1. ஈசாக்கின் வாழ்க்கை
2. ஆபிரகாமின் வாழ்க்கை
3. மோசேயின் வாழ்க்கை
4. தாவீது அரசனின் வாழ்க்கை
5. யாக்கோபுவின் வாழ்க்கை

16. மெசியா அல்லது அபிஷேகம் செய்யப்பட்டவர் என்பது பழைய ஏற்பாட்டில் யாரைக் குறிக்கப் பயன் படுத்தப்பட்டது?
   1. இறைவாக்கினர்கள், அரசர்கள், பரிசேயர்கள்
   2. அரசர்கள், நடுவர்கள், பரிசேயர்கள்
   3. இறைவாக்கினர்கள், குருக்கள், நடுவர்கள்
   4. அரசர்கள், நடுவர்கள், குருக்கள்
   5. இறைவாக்கினர்கள், அரசர்கள், குருக்கள்

17. திருவிவிலியத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பல்வேறு காட்சிகளுள் இறைவாக்கினர் எரேமியா கண்ட காட்சி எது?
   1. உலர்ந்த எலும்புகள்
   2. பதுமையான உயிரினம்
   3. சேராபீன்கள்
   4. மாட்சிமிகு இறைகாட்சி
   5. அத்திப்பழங்கள் நிறைந்த இரண்டு கூடைகள்

18. இறைவனுக்காக அவருடைய செய்தியைப் பகிரங்கமாகப் பயமின்றிக் காலத்திற்குப் பொருத்தமான முறையில் வெளிப்படுத்தியவர்களைக் குறிக்கும் கிரேக்க சொல்
   1. நபி
   2. ப்றொபோரஸ்
   3. யாவே
   4. ஹெசெட்
   5. மதடேஸ்

19. யூதமக்கள் நாடு கடத்தப்பட்டிருந்த போது அவர்கள் அமைத்துக் கொண்ட வழிபாட்டுத்தலம்
   1. தலைமைச்சங்கம்
   2. சினகொக்
   3. பலிப்பீடம்
   4. ஆலயம்
   5. நீதிமன்றம்

20. சிலுவையின் மீது வைத்த குற்ற அறிக்கையைத் திருத்தி மீண்டும் எழுதும் என யூத தலைமைக் குருக்கள் பிலாத்துவிடம் முன்வைத்த ஆலோசனை என்ன?
   1. நாசரேத்து இயேசு யூதர்களின் அரசன்
   2. நாசரேத்து இயேசு யூதர்களின் அரசன் அல்ல
   3. இயேசு யூதர்களின் அரசன்
   4. யூதர்களின் அரசனாகிய நாசரேத்து இயேசு
   5. யூதர்களின் அரசன் நான் என்று அவனே சொல்லிக் கொண்டான்

21. இயேசு உயிர் துறந்தபோது இம்மனிதர் உண்மையாகவே இறைமகன் எனக் கூறியவர்
   1. நூற்றுவர் தலைவர்
   2. இடப்பக்கக் கள்வன்
   3. அரிமத்தியா யோசேப்பு
   4. வலப்பக்கக் கள்வன்
   5. திருத்தூதர் யோவான்

22. குற்றவாளியை சிலுவையில் அறைவதற்கு தீர்ப்பிடும் அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது
   1. உரோமை ஆட்சியாளருக்கு
   2. தலைமைக்குருக்களுக்கு
   3. உரோமைப் பேரரசனுக்கு
   4. செனற்டீன் மன்றத்திற்கு
   5. படைவீரர்களுக்கு

23. கிரேக்கமொழியில் பசிலெய்யா என்ற சொல்லின் மூலம் கருதப்படுவது
   1. நற்செய்தி
   2. இறையரசு
   3. மரபுகள்
   4. சீடர்கள்
   5. திருச்சபை

24. யூதர்களின் நாட்காட்டியின் படி வாரத்தின் முதல்நாள் என்பது
1. ஞாயிற்றுக்கிழமை 2. சனிக்கிழமை 3. வெள்ளிக்கிழமை
4. புதன்கிழமை 5. திங்கட்கிழமை

25. நற்செய்தியாளர் மாற்கு என்பவருடன் பொருந்தாத கூற்றாவன
1. நற்செய்திக்கு அரமேய சொற்களை அதிகளவு பயன்படுத்தியவர்
2. கிறிஸ்துவே இஸ்ரயேல் மக்கள் எதிர்பார்த்த மெசியா என்பதை யூதமக்களுக்கு காட்டு தலை நோக்கமாகக் கொண்டவர்
3. கெத்சமனித் தோட்டத்தில் இயேசுவைக் கைது செய்த போது தப்பியோடிய இளைஞன்
4. செல்வந்த குடும்பத்தைச் சேர்ந்தவர்
5. நம்பிக்கைக்குரிய பணியாளனாகப் பவுலால் கூறப்பட்டவர்

26. என் மகன் மாற்கு என்பது
1. பேதுருவின் வெளிப்பாடு
2. பவுலின் வெளிப்பாடு
3. யோவானின் வெளிப்பாடு
4. யாக்கோபுவின் வெளிப்பாடு
5. பர்ணபாவின் வெளிப்பாடு

27. புனித லூக்கா
1. பலஸ்தீனாவில் வழக்கிலிருந்த பாரம்பரியத்தை எழுதினார்
2. உரோமையில் கடைப்பிடிக்கப்பட்ட பாரம்பரியத்தை எழுதினார்
3. எபேசுவில் கடைப்பிடிக்கப்பட்ட பாரம்பரியத்தை எழுதினார்
4. கொரிந்துவில் கடைப்பிடிக்கப்பட்ட பாரம்பரியத்தை எழுதினார்
5. அந்தியோக்கியாவில் கடைப்பிடிக்கப்பட்ட பாரம்பரியத்தை எழுதினார்

28. "எம்" (M) மூலம் என்பதனால் கருதப்படுவது
1. தூய லூக்காவிற்கு மட்டும் உரிய போதனை முறையாகும்
2. தூய மத்தேயுவிற்கு மட்டும் உரிய போதனை முறையாகும்
3. தூய மாற்குவிற்கு மட்டும் உரிய போதனை முறையாகும்
4. தூய யோவானிற்கு மட்டும் உரிய போதனை முறையாகும்
5. தூய மத்தேயுவிற்கும் தூய லூக்காவிற்கும் மட்டும் உரிய போதனை முறையாகும்

29. இறையரசின் அதிபதி
1. இறைவன்
2. உலகு
3. திருச்சபை
4. நற்செய்தி
5. தேர்ந்தெடுக்கப்பட்டோர்

30. தூய பவுல் தமது இரண்டாம் மறைத்தூதுரைப் பயணத்தை ஆரம்பித்த இடம்
1. எருசலேம் 2. உரோம் 3. அந்தியோக்கியா
4. தெசலோனிக்கா 5. கொரிந்து

31. திருத்தொண்டர் பிலிப்புவின் சாதனையானது
1. திருச்சபை ஜெருசலேமிற்கு வெளியே பரவிச் செல்ல வழிவகுத்தது
2. சமாரித்தர்களை மனந்திருப்பி அவர்களுக்கு திருமுழுக்கு அளித்து கிறிஸ்வர்களாக்கியது
3. பேய்களை ஓட்டுதல், நோயாளர்களைக் குணப்படுத்துதல் போன்ற வல்ல செயல்களை இயேசுவைப் போன்று செய்தது
4. எத்தியோப்பிய அண்ணகனைத் திருமுழுக்குக் கொடுத்து கிறிஸ்தவனாக்கியது
5. மந்திரவாதி சீமோனை மனந்திருப்பியது.

32. திருச்சபை வரலாற்றில் வீரவரலாற்றுக் காலம் எனக் குறிப்பிடப்படுவது
1. முதலாம் நூற்றாண்டு
2. இரண்டாம் நூற்றாண்டு
3. மூன்றாம் நூற்றாண்டு
4. முதல் இரு நூற்றாண்டுகள்
5. முதல் மூன்று நூற்றாண்டுகள்

33. ஜெருசலேம் சங்கத்தீர்மானங்களை கொண்டு செல்லும் பிரதிநிதிகளாச் தெரிவுசெய்யப்பட்டவர்கள்
1. பர்ணபா, சீலா 2. யூதா, பர்ணபா 3. பவுல், பேதுரு
4. சீலா, திமொத்தேயு 5. தீத்து, திமோத்தேயு

34. ஜெருசலேம் சங்கத்திற்கு தலைமை தாங்கியவர்
1. யாக்கோபு 2. பேதுரு 3. பவுல் 4. பர்ணபா 5. யூதா

35. அஞ்சாதே பேசிக் கொண்டேயிரு நிறுத்தாதே என்று பவுலுக்கு காட்சி காண்பிக்கப்பட்ட இடம்
1. துரோவா 2. எபேசு 3. கொரிந்து 4. எதென்ஸ் 5. பிலிப்பி

36. கத்தோலிக்க திருச்சபை ஆரம்பிக்கப்பட்ட இடம்
1. பலஸ்தீனா 2. எருசலேம் 3. யூதேயா 4. எபேசு 5. உரோமை

37. தூய பவுலின் மூன்றாம் மறைத்தூதுப் பயணத்தில் துரோவாவில் இடம் பெற்ற பிரதான சம்பவம்
1. திருமுழுக்கு யோவானின் சீடர்கள் பன்னிருவர் திருமுழுக்குப் பெற்றது
2. சிலைவழிபாட்டுக்கு எதிராகத் தூண்டியது
3. யுத்திகு என்னும் இளைஞனுக்கு உயிர் கொடுத்தது
4. அக்கிலா பிரிஸ்கிலா என்பவர்களைச் சந்தித்தது
5. பாஸ்கா விழா கொண்டாடியது

38. ஆவி என்னும் சொல்லை விளக்கித் தர தூய பவுல் பயன்படுத்தும் கிரேக்க சொல்
1. ரூஆக் 2. கரிஸ்மா 3. அகப்பே 4. நெயுமா 5. நபி

39. நிசேயா பொதுச்சங்கத்தை ஒன்று கூட்ட கொன்சன்ரைன் பேரரசனுக்கு அங்கீகாரம் வழங்கியவர்
1. திருத்தந்தை எட்டாம் பொனிபஸ்
2. திருத்தந்தை சில்வெஸ்டர்
3. திருத்தந்தை பதினொராம் பத்திநாதர்
4. திருத்தந்தை பதின்மூன்றாம் சிங்கராயர்
5. திருத்தந்தை இருபத்திமூன்றாம் அருளப்பர்

40. பெலாஜிய தப்பறைக் கொள்கையை முற்றாக மறுத்த திருத்தந்தை
1. தூய ஜெரோம் 2. தூய யஸ்ரின் 3. தூய சிறில்
4. தூய அகுஸ்தின் 5. தூய கிளமென்ட்

41. கிறிஸ்து திருச்சபையை அன்பு செய்வது போல கணவர்களும் தமது மனைவியரை அன்பு செய்யுங்கள் என்னும் கூற்று இடம் பெற்றுள்ளது
1. மத்தேயு நற்செய்தியில்
2. யோவான் நற்செய்தியில்
3. தெசலோனிக்கருக்கு எழுதிய முதலாவது திருமுகத்தில்
4. திமோத்தேயுவிற்கு எழுதிய முதலாவது திருமுகத்தில்
5. எபேசியருக்கு எழுதிய திருமுகத்தில்

42. தூய பவுல் சிறையிலிருந்த போது தனது பிள்ளையாக மதித்த ஒருவரைப் பற்றித் தமது திருமுகத்தில் கூறுகின்றார். அவர் பெயர் என்ன?
1. பர்ணபா 2. சீலா 3. மாற்கு 4. ஒனேசிமு 5. பேதுரு

43. திருப்பலியில் சொல்லப்படும் நிசேயா விசுவாசப் பிரமாணம் திருச்சபை முழுவதும் விசுவாச சத்தியமாக ஏற்றுக் கொண்ட பொதுச்சங்கம்
1. எருசலேம் பொதுச்சங்கம்
2. நிசெயா பொதுச்சங்கம்
3. கல்சடோன் பொதுச்சங்கம்
4. எபேசு பொதுச்சங்கம்
5. கொன்ஸ்தாந்துநோபிள் பொதுச்சங்கம்

44. உடலின் உயிர்ப்பு பற்றி விளக்குவதற்காக தூய பவுல் பயன்படுத்தும் உவமை
1. இறந்த உடல்
2. விதைக்கப்படும் விதை
3. முளைவிடும் தளிர்
4. வளரும் மரம்
5. உலர்ந்த எலும்புகள்

45. பின்வருவோருள் ஆரம்பகால திருச்சபையின் தந்தையர் பட்டியலில் இடம் பெறாதவர் யார்?
1. புனித பசில்
2. புனித கிரகோரி நாசியன்ஸ்
3. புனித அம்புரோஸ்
4. புனித ஜெரோம்
5. புனித தோமஸ் அக்குவினஸ்

46. ஆரம்பகாலத்தில் திருத்தொண்டர்களுக்கு கொடுக்கப்பட்டிருந்த பிரதான பணி
1. நற்செய்தியை எடுத்துரைத்தலும் திருமுழுக்களித்தலும்
2. நற்செய்தியை எடுத்துரைத்தலும் அறப்பணி செய்தலும்
3. புதுமைகளைச் செய்தலும், அறப்பணி செய்தலும்
4. சபைகளை நிறுவுதலும், நம்பிக்கைக்குரிய வாழ்க்கை நடாத்துதலும்
5. பந்தியில் பரிமாறுதலும் அறப்பணியில் ஈடுபடுதலும்

47. திரைபோவுடன் உரையாடல் என்னும் நூலை எழுதியவர்
1. யஸ்ரின் 2. ஜெரோம் 3. அத்தனாசியார் 4. சிறில் 5. அகஸ்டின்

48. கீழைத்தேய மேலைத்தேய சபைகளின் பிளவு ஏற்பட்ட காலமாகக் கருதப்படுவது
1. கி.பி. 922 2. கி.பி. 1054 3. கி.மு. 722 4. கி.மு. 1096 5. கி.பி. 1204

49. நம்பிக்கையின் காவலர் என்ற புகழ்மாலைக்குரிய அரசர்
1. பெரிய சாள்ஸ் 2. இரண்டாம் ஊர்பன் 3. எட்டாம் ஹென்றி
4. லூயிஸ் மன்னன் 5. தோமஸ் மூர்

50. சீர்திருத்த சபைகளின் இரண்டாம் பரம்பரையைச் சேர்ந்தவர்
1. மாட்டின் லூதர் 2. ஜோண்கல்வின் 3. சுவிங்கிலி
4. எட்டாம் ஹென்றி 5. தோமஸ் முன்சர்

வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

**Field Work Centre**

FWC

# தவணைப் பரீட்சை, நவம்பர்- 2016
# Term Examination, November - 2016

| தரம் :- 13 (2017) | கிறிஸ்தவம் – II | மூன்று மணித்தியாலங்கள் |
|---|---|---|

❖ பகுதி I இல் எவையேனும் இரண்டு வினாக்களையும், பகுதி II இல் எவையேனும் மூன்று வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

## பகுதி I

01) i. பாவத்தின் விளைவாக சமத்துவ நிலை முறிவடைந்த விதத்தினை நான்கு காரணிகள் மூலம் எடுத்துக் காட்டுக.

ii. இஸ்ரயேல் மக்களின் வரலாற்றில் அவர்கள் இறைவனைக் கண்டுணர்ந்த சம்பவங்கள் நான்கு தருக.

iii. உண்மையான இறைவாக்கினர் ஒருவரை இனங்காண்பதற்கான அளவுகோல்கள் நான்கு தருக.

iv. இஸ்ரயேல் மக்கள் மத்தியில் காணப்பட்ட சமூகப் பிரிவுகள் நான்கினைப் பெயரிடுக.

v. கலிலேயாவை அண்மித்துள்ள பிரதேசங்களில் இடம் பெற்ற சம்பவங்கள் நான்கு தருக.

02) i. இறைவன் வாக்குப் பண்ணிய மெசியா என்பதைக் காட்ட மத்தேயு தமது நற்செய்திக்கு அடிப்படையாகக் கொண்ட விடயங்கள் நான்கு தருக.

ii. மாற்கு கிறிஸ்துவின் பாடுகளைப் பிரித்துக் காட்டும் நான்கு வடிவமைப்புகளும் எவை?

iii. ஆரம்பத் திருச்சபையில் திருத்தொண்டர்கள் ஆற்றிய பணிகள் நான்கைத் தருக.

iv. ஆரம்பத் திருச்சபையின் முக்கிய பண்புகள் நான்கைத் தருக.

v. ஸ்தேவானுக்கெதிராக சாட்டப்பட்ட குற்றங்களையும் அவரது வேதசாட்சி மரணம் நடைபெற்ற விதத்தையும் தருக.

03) i. இலத்தீன் சபைத் தந்தையர்கள் நால்வரைத் தருக.

ii. தூய சிறிலின் ஆக்கங்கள், அகஸ்டினின் ஆக்கங்கள் இவ்விரண்டை வெவ்வேறாக எழுதுக.

iii. கி.பி. 325- 451 இற்கு இடைப்பட்ட காலத்தில் கூட்டப்பட்ட சங்கங்கள் நான்கினது பெயர்களை எழுதுக

iv. பவுலின் இரண்டாம் மறைத்தூதுப் பயணத்தில் பிலிப்பியில் நடந்த நிகழ்வுகள் நான்கு தருக.

v. எருசலேம் சங்கத் தீர்மானங்கள் நான்கு தருக.

## பகுதி II

04) i. இறை ஏவுதலின் மூன்று வகைகளைக் குறிப்பிட்டு, அவை ஒவ்வொன்றையும் உதாரணம் தந்து விளக்குக.

ii. இறை ஏவுதலால் எழுதப்பட்ட இறைவார்த்தைகள் மூலமாகவும், சிறப்பான விடுதலைப்பயண நிகழ்வுகள் மூலமாகவும் இறைவெளிப்பாட்டைப் பெறும் நீர் இன்றைய சமுதாயத்தில் இறை பராமரிப்பை எவ்வாறு உணருகிறீர் என்பதை விளக்குக.

05) i. இறைவாக்கினர் அழைப்பின் பொதுப்பண்புகளைக் குறிப்பிட்டு, இறைவாக்கினர் ஒருவரின் அழைப்பில் இப்பொதுப்பண்புகள் காணப்படும் விதத்தைச் சுருக்கமாக விளக்குக.

ii. இன்றைய சமுதாயத்தின் சவால்களுக்கு முன்பே உமது இறைவாக்குப் பணியின் பொறுப்பினை உதாரணங்கள் தந்து விளக்குக.

06) i. மத்திய காலத்தில் திருச்சபை பிளவுபட்டதற்கான காரணத்தை ஐந்து விடயங்கள் மூலம் விளக்குக.

ii. மாட்டின் லூதரின் வாதத்தில் காணப்படும் கருத்துக்கள் ஐந்தினை விளக்குக

07) i. கொலோசேயர் $1:5-20$ ஆகிய பகுதிகளிலுள்ள கிறிஸ்துவின் தலைமைத்துவம் பற்றிக் குறிப்பிட்டு கிறிஸ்துவிற்கும் முழுப்படைப்பிற்குமிடையிலான உறவினை விளக்குக.

ii. பவுலின் பார்வையில் கிறிஸ்துவிற்கும் திருச்சபைக்குமிடையிலான உறவினை விளக்குக.

08) i. நிசேயா பொதுச்சங்கம் கூட்ட ஏதுவான காரணத்தை விளக்குக

ii. நிசேயா பொதுச்சங்கத்தைக் கூட்டியதால் கத்தோலிக்க திருச்சபையின் எதிர்பார்ப்பு எவ்வளவு தூரம் கைகூடியது என்பதனை விளக்குக.

The National e-learning Portal for The General Education